மடத்திற்கும் சொந்தமான நிலங்களை அரசு நடத்த, நஷ்ட ஈட்டை கோயில், மடங்களுக்கு வழங்கி, பிறகு உழவர்களுக்கு நிலங்களை வழங்கி, சாகுபடி செய்ய ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இது பெரிய கொள்கைப் பிரச்னை. இந்தக் குழு மீண்டும் கூடி இதைப் பற்றி ஆராயும் என்று முடிவு செய்திருக்கிறோம். இந்தியா முழுவதும் இதைப்பற்றிப் பரிசீலிக்க முதலமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டி முடிவு எடுப்பதாக இந்திய அரசு தெரிவித்திருக்கிறது.

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, தமிழகத்தில் கோயில், மடங்களுக்குச் சம்பந்தப்பட்ட நிலங்கள் எத்தனை ஏக்கர் இருக்கிறது என்பதை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, தனிக் கேள்வி வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இதைப்பற்றி ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அதில் அங்கம் வகிக்கக்கூடியவர்களில் சட்டப்பேரவை, மேலவை அங்கத்தினர்கள் யார் யார் இருக்கிறார்கள்? அதில் தெய்வ பக்தி உள்ளவர்கள் இருக்கிறார்களா? அல்லது தெய்வ பக்தி இல்லாதவர்களாக இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் அதில் அங்கம் வகிக்கவில்லை என்றாலும் அவர்களது கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, எல்லோரும் தெய்வபக்தி அற்றவர்களாக இருக்கிறார்கள் என்று எண்ண வேண்டாம். யாரும் நாத்திகர்கள் இருப்பதாக நான் அறியவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, மத்திய அரசாங்கத்திலிருந்து நமது மாநில அரசாங்கத்திற்கு இது சம்பந்தமாக ஏதாவது யோசனை சொல்லியிருக்கிறார்களா? அப்படியிருந்தால் அதன் விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இவைகளைப் பற்றி மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்குத் தெரிவிக்கவில்லை.

Financial Director in Tamil Nadu Industrial Development Corporation

* 82 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that proposals have been sent to the Central Government for the posting of a Financial Director for the Tamil Nadu Industrial Development Corporation Limited in 1971; and

1972 சனவரி 28]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) ஆம். தமிழ்நாடு அரசு இந்திய தணிக்கைத்துறைத் தலைவருடன் கலந்தாலோசித்து திரு. ஜி. துவாரகநாதன், ஐ.ஏ. & ஏ.எஸ். அவர்களை அயல் துறைப் பணி வரையறைகளின் கீழ் 28—6—1971 முதல் இரண்டு ஆண்டுக் கால அளவுக்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் முழுநேர நிதி இயக்குநராக நியமித்துள்ளது. இவர் மேற்படி கழகத்திடமிருந்து திங்கள் ஒன்றுக்கு ரூ. 1,800-லிருந்து 2,000 வரை என்ற விகிதத்தில் சம்பளமும் விதிகளின்கீழ் அனுமதிக்கத்தக்க அகவிலைப்படியும் பிற படிகளும் பெற அனுமதிக்கப்பட்டுள்ளார்.

Titanium factory in Tamil Nadu

*83 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to start a Titanium Factory in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இந்திய அரசுக்குச் சொந்தமான 'தி இண்டியன் ரேர் எர்தஸ் லிமிடெட்' என்னும் நிறுவனம் 90 சதவிகிதம் அல்லது அதற்கு மேல் டிடானியம் டை ஆக்ஸைட் கொண்ட சுத்திகரித்த இல்மினைட் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவது பற்றி யோசித்து வருகிறது. அந்த ஆலை தமிழ் நாட்டிலோ, கேரளாவிலோ, ஒரிஸ்ஸாவிலோ நிறுவப்படுவது சாத்தியம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, it is an important question and a supplementary question may be allowed.

Scooter factory in Public sector

*84 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up a scooter factory in public sector; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாக் கேள்விகளும் மிக முக்கியமான கேள்விகள்தான். 50 கேள்விகள் கேட்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு கேள்விக்கும் துணைக் கேள்விகள் வேண்டும் என்றால் 20 கேள்விகள் மட்டும் பேரவையில் கேட்கச் சொல்லி விட்டு, மற்றவைகளைப் பிரிண்ட் செய்துதான் வைக்க வேண்டியிருக்கும் என்று பலமுறை சொல்லியாகிவிட்டது. ஒன்று, கேள்விகள் கேட்கத்தான் வேண்டுமென்றால் கேளுங்கள், அதற்கும் சம்மதம்தான். அல்லது, எவ்வளவு கேள்விகள் கேட்பது என்று வைத்துக்கொள்ளலாம். 20 கேள்விகளைக் கேட்டுவிட்டு 30 கேள்விகளை பிரிண்ட் பண்ணிவைத்துவிடலாம்.